1979 பிப்ரவரி 22]

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, ஒருவேண்டுகோள். இன்றைக்கு 15 முதல் 20 கேள்விகள் கொடுக்கப்படுகின்றன. 40 கேள்விகள் கூட எடுத்துக் கொள்ள முடியும். எப்படியென்றால் யார் கேள்வியைக் கேட்டு இருக்கிறார்களோ அவர்கள் 4, 5 உப கேள்விகளைக் கேட்கின்ற முறையைக் கொண்டுவந்தால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசிய போது கேள்வி கொடுத்த உறுப்பினர் இரண்டு முறைகள் கேட்டால் போதும் என்று முடிவெடுத்து இருக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் சொல்வது, கேள்வி கேட்ட உறுப்பினருக்கு 4, 5 உப கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுப்பதன் மூலமாக 30, 40 கேள்விகள் கூட ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை கனிவாக நியாயமாக இருந்தாலும்கூட அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுக்கப்பட்ட முடிவுப்படி கேள்விகளை எடுத்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுறேன்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம்.

குறுகிய கால வினா எண்.2. திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை நிலையத்தை நாகர்கோவிலிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கின்றதா ?

(ஆ) அதனை நாகர்கோவிலிலேயே நிரந்தரமாக வைத்திருப்பதற்கு அரசு நிரந்தர வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை.

(ஆ) ஆம்.

[1979 பிப்ரவரி 22

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவாகளே, இந்த கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நிர்வாகத்தினுடைய மேனேஜிங் டைரக்டர் நாகர்கோவிலில் இருப்பதால் திருநெல்வேலியிலிருந்து, அங்கே பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்களும் மற்றவர்களும் நேரடியாக அவரைச் சந்தித்துப் பேசுவதற்கு சிரமங்கள் இருக்கின்றன, ஜெனரல் மானேஜரிடம் எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் இருக்கிறது. அவருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து வரக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு ஏற்பாடுசெய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து மாற்றாமல் பொது மேலாளருக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்ற குறைபாடுகளைக் களையச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்ய உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே நாகர்கோவிலில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக தலைமை பணிமனை இருப்பதால் ஆட்கள் எடுக்கும்பொழுதுகூட பெரும்பாலும் நாகர்கோவில் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் எடுப்பதன் காரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு பாதிக்கப்படுகிறது. எனவே, இங்கிருந்தும் ஆட்களை எடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுவதுபோல நடைமுறையில் ஒன்றுமில்லை. கன்னியாகுமரி மாவட்டததில் ஒரு புதிய வழித்திடத்தில் பேருந்து விடப்படுகிறது என்றாலும், அந்தப் பகுதியில் சம்பந்தப்பட்ட எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சிலிருந்து ஆட்கள் எடுக்கப்படுகிறார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தால் ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 40 சதவீதம் பேருந்துகள்தான் ஓட்டப்படுகின்றன. 60 சதவீதம் பேருந்துகள் தனியார் வசம் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் அதிக அரசுப் பேருந்துகளை விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறது. அப்பொழுது அங்கு நெல்லை மாவட்ட மக்களுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.